## 7

### திறவுகோல் வசனம்: நடபடிகள் 20:6, 7

# கர்த்தருடைய இராப்போஜனத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள்

*சபையின் மிகச்தொடக்க நாட்களில் இருந்தே, கர்த்தருடைய இராப்போஜனத்தைக் கடைப்பிடிப்பதற்கு, ஞாயிற்றுக்கிழமையே முறையான நாளாக இருந்தது, இது "வாரத்தின் முதல்நாள்" என்றும் அறியப் பட்டுள்ளது (நடபடிகள் 20:7). நடபடிகள் 20:7ல் "அப்பம்பிட்கும்படி" என்பதன் மூலம் வேறொன்றுமல்ல, ஆனால் கர்த்தருடைய இராப்போஜனமே அர்த்தப்படுத்தப்பட்டுள்ளது.[1]*

*"வாரத்தின் முதல்நாள்" என்பது ஓய்வுநாள் அல்ல, ஆனால் அது ஓய்வுநாளுக்கு அடுத்தநாளாக இருந்தது, இது சுவிசேஷ விபரங்களின் கூற்றுகளில் ஆதாரப்படுத்தப் பட்டுள்ளது (காண்க மத்தேயு 28:1; மாற்கு 16:1, 2; லூக்கா 23:56; 24:1). வேதாகமமோ அல்லது வரலாற்றுப் பதிவினங்களோ, கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தை ஓய்வுநாளில் கடைப்பிடித்தனர் என்று கூறுவதில்லை. இதற்கு நேர்மாறாக, கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்திற்காகக் கூடும் நாள் ஞாயிற்றுக்கிழமைதான் என்று தொடக்ககாலப் பதிவேடுகள் சாட்சியளிக்கின்றன.*

## ஓய்வுநாளைக் கடைப்பிடித்தல்

*ஓய்வுநாள் என்பது இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றுடன் இணைவு கொண்டிராமல், அந்த இரு நிகழ்வுகளுக்கு இடையிலான நாளாக இருந்தது. தேவன் இஸ்ரவேல் மக்களை எகிப்தின் அடிமைத் தளையில் இருந்து விடுவித்ததன் நினைவாக யூதர்கள் ஓய்வுநாளைக் கடைப்பிடித்தனர் (உபாகமம் 5:15). அவர்கள் எகிப்தில் இருந்து புறப்படுவதற்கு முன்பு அல்ல, ஆனால் அவர்கள் புறப்பட்ட பின்னர்தான், தேவன் ஓய்வுநாள் பிரமாணங்களை சீனாய் மலையில் ஏற்படுத்தினார். இஸ்ரவேல் மக்களின் வரலாற்றில் இந்த முக்கியமான நிகழ்வை நெகேமியா மீண்டும் எண்ணிப்பார்த்தார்:*

> *நீர் சீனாய்மலையிலிறங்கி, வானத்திலிருந்து அவர்களோடே பேசி, அவர்களுக்குச் செம்மையான நீதிநியாயங்களையும், நல்ல கட்டளைகளும் கற்பனைகளுமாகிய உண்மையான பிரமாணங்களையும் கொடுத்தீர். உமது பரிசுத்த ஓய்வுநாளை அவர்களுக்குத் தெரியப்படுத்தி, உமது தாசனாகிய மோசேயைக்கொண்டு, அவர்களுக்குக் கற்பனைகளையும், கட்டளைகளையும், நியாயப்பிரமாணங்களையும் கற்பித்தீர் (நெகேமியா 9:13, 14).*

இவ்வசனப் பகுதியில், ஓய்வுநாளைப் பற்றிய சான்றாகப் பல சத்தியங்கள் உள்ளன: அது ஆபிரகாமின் சந்ததியாரான இஸ்ரவேல் மக்களுக்கு, சீனாய் மலையின்மீது மோசேயினால் ஒரு நியமமாக அறியப்படுத்தப்பட்டது (நெகேமியா 9:7, 8, 13, 14). மோசேயின் மூலமாகத் தேவன் பின்வருமாறு கூறினார்:

> நீ எகிப்துதேசத்தில் அடிமையாயிருந்தாய் என்றும், உன் தேவனாகிய கர்த்தர் உன்னை அவ்விடத்திலிருந்து வல்லமையுள்ள கரத்தினாலும் ஓங்கிய புயத்தினாலும் புறப்படப்பண்ணினார் என்றும் நினைப்பாயாக; ஆகையால் ஓய்வுநாளை ஆசரிக்க உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிட்டார் (உபாகமம் 5:15).

தேவன் ஓய்வுநாளில் ஆராதிக்கப்படவில்லை, அவர் அதைச் செய்யும்படி இஸ்ரவேல் மக்களிடம் கேட்டுக்கொள்ளவும் இல்லை. அவர் ஏழாம்நாளில் *ஓய்ந்திருந்தபடியால்*, இஸ்ரவேல் மக்கள் *ஓய்ந்திருக்கும்படி* ஏழாம் நாளைத் தேர்ந்து கொண்டார் (யாத்திராகமம் 20:11). ஓய்வுநாள் என்பது வானங்கள் மற்றும் பூமி ஆகியவற்றை அவர் படைத்ததைக் கனப்படுத்தி ஆராதிக்கும் விசேஷித்த நாளாக இருக்கவில்லை. மக்கள் ஓய்வுநாளின் பின்வரும் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டியவர்களாக இருந்தனர்:

- அவர்கள் தங்கள் இடங்களில் இருந்து வெளியே செல்லக்கூடாதிருந்தது (யாத்திராகமம் 16:29ஆ).
- அவர்கள் தலைமுறைகள்தோறும் ஓய்வுநாளைக் கடைப்பிடிக்க வேண்டியிருந்தது (யாத்திராகமம் 31:12, 13, 16).
- இந்த நாள் தேவன் மற்றும் இஸ்ரவேல் மக்களுக்கு இடையிலான ஒரு அடையாளமாக இருந்தது என்பதை அவர்கள் உணர்ந்து அறிய வேண்டியதாயிற்று (யாத்திராகமம் 31:13).
- அவர்கள் இந்த நாளில் வேலை எதுவும் செய்யாமல் பரிசுத்தமாகக் காத்துக்கொள்ள வேண்டியதாயிற்று (யாத்திராகமம் 31:14; உபாகமம் 5:12-15; எரேமியா 17:24).
- அவர்கள் இந்த நாளில் உடல்ரீதியான உழைப்பு எதிலும் ஈடுபட்டு அதைத் தீட்டுப்படுத்த கூடாதிருந்தது (யாத்திராகமம் 31:14, 15; 35:2).
- ஓய்வுநாளில் வேலை செய்யும் யாரையும் அவர்கள் கொல்ல வேண்டியதாக இருந்தது (யாத்திராகமம் 31:14, 15; 35:2).
- அவர்கள் ஓய்வுநாளை, இஸ்ரவேல் மக்களுக்கும் தேவனுக்கும் இடையிலான நிரந்தரமான உடன்படிக்கையாக ஏற்றுக்கொள்ள வேண்டி இருந்தது (யாத்திராகமம் 31:16).
- அவர்கள் அதை முழுமையான ஓய்வுநாள் என்ற வகையில் மதிக்க வேண்டி இருந்தது (யாத்திராகமம் 35:2).
- அவர்கள் அந்த நாளில் அடுப்பில் நெருப்பு மூட்டாது இருக்க வேண்டியதாயிற்று (யாத்திராகமம் 35:3).
- மாவினால் செய்யப்பட்ட பன்னிரெண்டு அப்பங்கள், பிரதான ஆசாரியரால் பரிசுத்த ஸ்தலத்தில் இருந்த பொன்மேஜையின்மீது இரு வரிசைகளில் வைக்கப்பட வேண்டி இருந்தன (லேவியராகமம் 24:5-8).

- ஆசாரியர்கள், போஜன மற்றும் பானபலிகளையும் இரு ஆட்டுக்குட்டிகளை தகனபலியாகவும் செலுத்த வேண்டி இருந்தது (எண்ணாகமம் 28:1-9).
- மக்கள் தங்களை எகிப்திய அடிமைத் தளையில் இருந்து தேவன் விடுவித்திருந்தார் என்பதை நினைவுகூர வேண்டி இருந்தது (உபாகமம் 5:15).
- வர்த்தகம் எதுவும் நடைபெறாதபடிக்கு நகரத்தின் வாசல்கள் மூடப்பட்டிருக்க வேண்டி இருந்தது (நெகேமியா 13:19-21; எரேமியா 17:24).

ஆராதனைக்கான அல்லது கர்த்தருடைய இராப்போஜனத்தைக் கடைப்பிடித்தலுக்கான விசேஷித்தநாள் என்ற வகையில் எவரொருவரும் ஓய்வுநாளில் காலமுறைப்படி கூடிவந்ததாக, பழைய அல்லது புதிய ஏற்பாட்டின் வசனப்பகுதி எதுவும் உரைப்பதில்லை. அதற்குப் பதிலாக, அது (ஓய்வுநாள்) இஸ்ரவேல் மக்கள் இளைப்பாறவும் தேவன் தமது மாபெரும் வல்லமையினால் அவர்களை எகிப்திய அடிமைத்தளையில் இருந்து விடுவித்ததை நினைவுகூரவும் விசேஷித்த நினைவுகூரும் நாளாக இருந்தது (உபாகமம் 5:15). இதனால்தான் தேவன், இஸ்ரவேல் மக்கள் எகிப்தில் இருந்து புறப்பட்டு சீனாய் மலையை வந்து அடையும் வரையில் ஓய்வுநாளை மோசேயின் மூலம் அறியப்படுத்தாது இருந்தார் (நெகேமியா 9:13, 14). அவர்கள் எகிப்தில் இருந்து விடுவிக்கப்படுவதற்கு முன்னர் தாங்கள் விடுவிக்கப்பட்டதை எவ்வாறு நினைவுகூர இயலும்?

பெரும்பான்மையான கிறிஸ்தவர்கள், இஸ்ரவேல் இனத்தைச் சேர்ந்தவர்களை முன்னோர்களாக கொண்டிராததால், எகிப்திய அடிமைத்தளையில் இருந்து விடுவிக்கப்பட்டது என்பது நமக்குக் கொஞ்சம் அர்த்தமே கொண்டுள்ளது. வாரத்தின் முதல்நாளான ஞாயிற்றுக்கிழமைதான் கிறிஸ்தவர்களின் விசேஷித்த நாளாக உள்ளது. அன்றுதான், நாம் பாவத்தில் இருந்து விடுதலையாக்கப்பட்டதையும் இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் மூலமாக புதிய ஆவிக்குரிய வாழ்வினுள் நமது பிரவேசத்தையும் நினைவுகூரக் கூடிவருகிறோம். தேவனுடைய ஓய்வுநாள் பிரமாணம் இஸ்ரவேல் மக்களை மாத்திரம் உள்ளடக்கி இருந்ததால் (யாத்திராகமம் 31:13, 16), ஓய்வுநாளைக் கடைப்பிடித்தல் பற்றி மற்றவர்கள் நம்மைக் குற்றப்படுத்த நாம் அனுமதிக்கக் கூடாது (கொலோசெயர் 2:16).

வரலாற்று எழுத்துக்களை ஆழ்ந்து ஆராய்ந்த பின்னர், எவெரட் ஃபெர்குஸன் அவர்கள் பின்வருமாறு முடிவுசெய்தார்:

> தொடக்ககாலக் கிறிஸ்தவர்களின் ஆராதனைநாளுக்கான சாட்சியம், தெளிவாகவும் தவறற்றதாகவும் உள்ளது. அவர்கள் யூதர்களைப் போன்று, ஓய்வுநாளாக ஏழாம் நாளைக் கடைப்பிடிக்கவில்லை, ஆனால் அவர்கள், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் நாளான வாரத்தின் முதல்நாளில் கூடிவந்தனர்.[2]

இது வரலாற்றுத் தகவல்களை ஆழ்ந்து சிந்தித்தலில் மதிப்புமிக்க உற்றுநோக்கலாக உள்ளது. கிறிஸ்தவத்தின் தொடக்க நாட்களில் இருந்து மூன்றாம் நூற்றாண்டு அல்லது அதற்குப் பிற்பாடும்கூட, கர்த்தருடைய இராப்போஜனம்,

வாரத்தின் ஏதாவது ஒருநாளிலோ அல்லது ஒவ்வொரு நாளிலுமோ அல்ல, ஆனால் ஞாயிற்றுக்கிழமையில்தான் கடைப்பிடிக்கப்பட்டது.

## வாரத்தின் முதல் நாள், இயேசுவின் நாள்

தொடக்ககாலக் கிறிஸ்தவர்களின் நடைமுறை குறித்த புதிய ஏற்பாட்டு போதனைகளில் இருந்து குறிப்பிட்ட சில முடிவுகள் தரவழைக்கப்பட முடியும்.

- அவர்கள் ஒன்றுகூடி வந்தனர் (நடபடிகள் 20:7; 1 கொரிந்தியர் 11:18, 20, 33, 34).
- அவர்கள் ஒரு குறிப்பிட்ட நாளில் கூடிவந்தனர் (காண்க எபிரெயர் 10:25).
- அவர்கள் "கர்த்தருடைய நாள்" என்று அறியப்பட்ட ஒரு விசேஷித்த நாளைக் கொண்டிருந்தனர் (வெளிப்படுத்தின விசேஷம் 1:10).
- அவர்கள் வாரத்தின் முதல்நாளில் கூடிவந்தனர் (நடபடிகள் 20:7).
- அவர்கள் வாரத்தின் முதல்நாளில் கர்த்தருடைய இராப்போஜனத்தைக் கடைப்பிடித்தனர் (நடபடிகள் 20:7).
- அவர்கள் வாரத்தின் முதல்நாளில் காணிக்கை செலுத்தினர் (1 கொரிந்தியர் 16:2).

வாரத்தின் முதல்நாளான ஞாயிற்றுக்கிழமை, கர்த்தருடைய இராப்போஜனத்தைக் கடைப்பிடிக்க கர்த்தருடைய விசேஷித்த நாளாக இருந்தது. யோவான், "கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானேன்" என்று எழுதினார் (வெளிப்படுத்தின விசேஷம் 1:10அ). மற்ற சொல்விளக்கங்களைப் போன்றே, "கர்த்தருடைய நாள்" என்பதும், அது பயன்படுத்தப்பட்ட வரலாற்றுக் காலகட்டத்தின்போது கொண்டிருந்த அர்த்தத்தினால் புரிந்துகொள்ளப்பட வேண்டும். தொடக்ககாலக் கிறிஸ்தவ எழுத்தாளர்கள் "கர்த்தருடைய நாள்" (*te kuriake hemera*) என்ற சொல்லை, இயேசுவின் வெற்றிகரமான உயிர்த்தெழுதலைக் குறிக்கவே பயன்படுத்தினர். புதிய ஏற்பாட்டிற்கு வெளியே இது வாரத்தின் முதல்நாளான ஞாயிற்றுக்கிழமையைக் குறிக்க மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்த சந்தர்ப்பப்பொருளில் "கர்த்தருடைய" என்பது உடமைப் பெயர்ச்சொல்லாக இருப்பதில்லை, ஆனால் இது ஒரு பெயர் உரிச்சொல்லாக உள்ளது, இது கர்த்தரைக் கனப்படுத்தும் விதத்தில் என்று அர்த்தப்படுகிறது. இதே பெயர் உரிச்சொல்தான் கர்த்தரைக் கனப்படுத்தும் இராப்போஜனத்தைக் குறிக்கும் "கர்த்தருடைய இராப்போஜனம்" என்ற சொற்றொடரிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது (1 கொரிந்தியர் 11:20),[3] வெளிப்படுத்தின விசேஷம் 1:10ல் "பேரரசுக்குரிய நாள்" என்பதே நேரடியான மொழிபெயர்ப்பாக உள்ளது. வரியிடை வசன வேதாகமம் ஒன்றில், 1 கொரிந்தியர் 11:20ம் வசனத்திற்கான அடிக்குறிப்பு ஒன்று, இந்த மொழிபெயர்ப்பைத் தருவதற்கான காரணத்தைப் பின்வருமாறு விளக்குகிறது[4]: "கர்த்தருடைய நாள்" என்ற சொல்விளக்கம், கிறிஸ்தவர்கள் கூடிவருவதற்கான விசேஷித்த நாள் என்ற வகையில் ஞாயிற்றுக்கிழமையைக் குறிப்பதற்குத் தொடக்ககால சபையாரால்

பயன்படுத்தப்பட்டது.

> இது "கர்த்தருடைய நாள்" என்ற குறிப்புச்சொல்லுக்கான ஒரு மாற்றாக மாத்திரமே உள்ளது என்று சிலர் வாதிட்டிருந்தபோதிலும், இது நியாயத்தீர்ப்பின் நாளைக் குறிப்பதற்கு பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்பட்டது, ..., பெரும்பான்மையான கல்வியாளர்கள், இது ஞாயிற்றுக்கிழமைக்கான குறிப்பாக உள்ளது என்று முடிவுசெய்கின்றனர். ... இந்த முடிவு தொடக்கக்கால கிறிஸ்தவ சட்டமற்ற பிற எழுத்துக்களில் "கர்த்தருடைய நாள்" என்ற சொல் அடிக்கடி பயன்படுத்தப்பட்டதால் ... ஞாயிற்றுக்கிழமையைக் குறிப்பதற்கென்று ... நிலைநாட்டப்பட்டது.[5]

> ... கிறிஸ்தவர்களால் வாரத்தின் முதல்நாள் விசேஷித்த வகையில் கடைப்பிடிக்கப்படுதல் [1 கொரிந்தியர் 16:2, நடபடிகள் 20:7] சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது. [வெளிப்படுத்தின விசேஷம் 1:10] இது கர்த்தருடையநாள் என்று அழைக்கப்பட்ட மிகமுற்காலத்திய வசனமாகும், ஆனால் இங்கு இப்பெயர் பயன்படுத்தப்பட்ட வகையானது, இது நிலைநாட்டப்பட்ட குறிப்புப்பெயர் என்பதைக் காண்பிக்கிறது, மற்றும் இப்படிப்பட்ட பெயரானது மிகத்தொடக்காலத்தில் அப்போஸ்தலர்களுக்குப் பிந்திய எழுத்தாளர்களின் எழுத்துக்களில் காணக்கிடைக்கிறது.[6]

வெளிப்படுத்தின விசேஷம் 1:10ல் உள்ள "கர்த்தருடையநாள்" என்ற சொற்றொடர், பழைய ஏற்பாட்டு "யாவேயின்நாள்"[7] என்பதுடன் குழப்பப்படாதிருக்க வேண்டும். அதேபோன்று இது, தேவனுடைய நியாயத்தீர்ப்பு அல்லது கோபாக்கினையின் நாளைக் குறிக்கும் "கர்த்தரின் நாள்" என்ற புதிய ஏற்பாட்டு சொல்விளக்கத்துடனும் குழப்பப்படாதிருக்க வேண்டும்.[8]

> நியாயத்தீர்ப்பு நாளுக்கு எடுத்துச் செல்லப்படுவதாக (யோவான்) தாமே கருத்துருவாக்கினார் ... என்ற கண்ணோக்கு, வேறிடத்தில் காணப்படும் *கர்த்தருடைய* நாள் என்ற சொற்றொடருக்குச் சீராகத் தரப்படும் அர்த்தத்திற்கு எதிரானதாக உள்ளது, மற்றும் இது இங்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தரிசனத்தின் பொருள் விஷயத்துடன் மாறுபட்டதாக உள்ளது.[9]

"கர்த்தருடைய நாள்" மற்றும் பேரரசுக்குரிய நாள் (வெளிப்படுத்தின விசேஷம் 1:10) என்றிருந்த முதல் நாளில் (நடபடிகள் 20:7), கிறிஸ்தவர்கள் "பேரரசுக்குரிய" இராப்போஜனத்துடன் தங்கள் அரசரை நினைவுகூர்ந்து அவரைக் கனப்படுத்துவதற்காக "அப்பம் பிட்க" வேண்டி இருந்தது. "அப்பம் பிட்குதல்" மற்றும் "இராப்போஜனம்" ஆகிய இரண்டுமே ஒரு உணவைப் பயன்படுத்துவதாக இருந்தது. "யாருடைய உணவு" என்ற கேள்வி பதில் அளிக்கப்பட வேண்டியதாக உள்ளது. பவுல், கொரிந்தியருக்கு எழுதிய தமது நிருபத்தில் அவரால் குறிப்பிடப்பட்டது போன்றே (1 கொரிந்தியர் 11:20),

லூக்கா, "அப்பம் பிட்குதல்" என்ற சொற்றொடரைக் கொண்டு கர்த்தரின் இராப்போஜனத்தையே அர்த்தப்படுத்தினார்.

சந்தர்ப்பப்பொருள் மற்றும் இலக்கணம் ஆகியவற்றின்படி (ஆங்கில வேதாகமத்தில் "the") அப்பம் பிட்குதல் (நடபடிகள் 2:42) என்பது - அப்போஸ்தலருடைய உபதேசம், ஐக்கியம் மற்றும் ஜெபங்கள் ஆகிய - ஆராதனையின் மற்ற செயல்களுடன் இணைவு கொண்டுள்ள குறிப்பிட்ட நடைமுறையாக உள்ளது. "The" (*tou*) என்ற திட்டவட்டச் சுட்டுச்சொல், பொதுவான ஒரு உணவை அல்ல, ஆனால் விசேஷித்த வகையில் அப்பம் பிட்குதலைப் பற்றிப் பேசுகிறது. நடபடிகள் 2:46ல் திட்டவட்டச் சுட்டுச்சொல் எதுவும் காணப்படுவதில்லை, இது அவ்வசனத்தில் உள்ள "அப்பம் பிட்குதல்" என்பது கர்த்தருடைய விசேஷித்த உணவு அல்ல ஆனால் கிறிஸ்தவ இல் லங்களில் உண்ணப்பட்ட பொதுவான உணவுகள் என்பதாக இருந்தது என்று அர்த்தப்படுகிறது.

சீஷர்கள் பவுல் பிரசங்கித்ததைக் கேட்பதற்காக அல்ல ஆனால் அப்பம் பிட்குதலுக்காகவே வாரத்தின் முதல் நாளில் கூடிவந்தனர் (நடபடிகள் 20:7). இருப்பினும், அந்த சந்தர்ப்பத்தை அவர் (பவுல்) அவர்களுக்குப் பிரசங்கிப்பதற்கு அனுகூலப்படுத்திக் கொண்டார். அவர்களுடன் சபையில் கூடிவருவதற்காக அவர், திங்கள் கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரையில் ஏழுநாட்கள், துரோவாவில் காத்திருந்தார் (20:6). அப்பம் பிட்குதலுக்கான இந்த வேளைக்கு முன்னதாக அவர், சபையின் உறுப்பினர்கள் பலருடைய இல்லங்களுக்குச் சென்று பொதுவான உணவை உண்டிருக்க வேண்டும்; ஆனால் ஞாயிற்றுக்கிழமை வரும்வரையில் அவர் அவர்களுடன் சபையாகக் கூடிவரவில்லை, அந்த நாள்தான் அவர்கள் கர்த்தரின் பந்தியை ஆசரிப்பதற்கு சபையாகக் கூடிவரும் நாளாக இருந்தது.

துரோவாவில் அவர்கள் கூடிவந்தது, NEB வேதாகமத்தில் உரைக்கப்பட்டுள்ளது போல, சனிக்கிழமை மாலையில் நடைபெறவில்லை. துரோவா நகரானது ரோமானியர்களின் காலனியாக இருந்ததால், மக்கள் ரோமானிய காலவேளையையே கடைப்பிடித்திருப்பார்கள். யூதர்களின் நாள் கணக்கின்படி, ஞாயிற்றுக்கிழமை என்பது (சனிக்கிழமை) சூரியன் மறையும் வேளையில் (மாலை 6.00 மணி) தொடங்கிற்று. ரோமானியக் காலமுறைமையின்படி, ஞாயிற்றுக்கிழமை என்பது நள்ளிரவு வேளையில் தொடங்கிற்று. எவ்வகையிலும் இந்தக் கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல்நாளான ஞாயிற்றுக்கிழமையில்தான் கூடிவந்தனர்.

வாரத்தின் நாட்கள் பற்றிய யூதத்துவ சொற்றொடராக்கத்தைப் புரிந்து கொண்டிராத சிலர், "*mia ton sabbaton,*" என்ற சொற்றொடர் "ஓய்வுநாட்களில் ஒன்று" என்று நேரடியாக அர்த்தப்படுவதால். ஓய்வுநாளில்தான் கிறிஸ்தவர்கள் கூடிவந்தனர் என்று முடிவு செய்கின்றனர் (நடபடிகள் 20:7). யூதர்கள், ஓய்வுநாளுடனான தொடர்பைக் கொண்டே வாரத்தின் நாட்களைப் பற்றிப் பேசினர். ஓய்வுநாள் என்பது வாரத்தின் ஏழாம் நாளாக இருந்தது (யாத்திராகமம் 20:10; உபாகமம் 5:14), இது வாரத்தின் கடைசி நாளாக இருந்தது. ஓய்வுநாளுக்கு அடுத்த நாள் (ஞாயிற்றுக்கிழமை) "ஓய்வுநாளுக்கு அடுத்த முதல்நாள்" என்று அழைக்கப்பட்டது. திங்கள்கிழமை "ஓய்வுநாளுக்கு இரண்டாம் நாள்" என்று இருந்தது. இயேசு ஓய்வுநாளில் உயிர்த்தெழவில்லை, ஆனால் வாரத்தின் முதல்

நாளில் - ஞாயிற்றுக்கிழமையில் - உயிர்த்து எழுந்தார். "ஓய்வுநாளுக்கு அடுத்த முதல்நாள்" என்பது ஓய்வுநாளுக்கு அடுத்த நாள் என்று அர்த்தம் கொண்டிருந்தது (மத்தேயு 28:1; மாற்கு 16:1, 2; லூக்கா 24:1, 2; யோவான் 20:1).

நிகழ்வுகளின் இவ்வரிசை சில முக்கியமான சத்தியங்களை உறுதிப்படுத்துகிறது:

- துரோவாவில் இருந்த சீஷர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தில் புசிப்பதற்காக வாரத்தின் முதல்நாளில் ஒன்றுகூடினர்.
- மத அமைவு ஒன்றில், தொடக்ககால சபையார் கர்த்தருடைய இராப்போஜனத்தை அர்த்தப்படுத்த "அப்பம் பிட்குதல்" என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினர்.
- ஆராதனை நோக்கங்களுக்கு விசேஷித்த மதக்கூடுகைகள் பயன்படுத்தப்பட்டிருந்தன.
- சீஷர்கள் குறிப்பிட்ட நோக்கத்திற்காக, அதாவது கர்த்தருடைய இராப்போஜனத்தில் உண்பதற்காக வாரத்தின் முதல்நாளில் ஒன்றுகூடினர். இந்தக் கூடுகையை, சீஷர்களுக்குப் பிரசங்கிப்பதற்குப் பவுல் பயன்படுத்தினார்.
- சபையானது கூடிவருவதற்காகப் பவுல் துரோவாவில் ஏழுநாட்கள் காத்திருந்தார், அவர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தில் உண்பதற்காக ஞாயிற்றுக்கிழமையில் இவ்வாறு கூடிவந்தனர்.

கிறிஸ்தவர்கள் தத்தமது வரவிற்குத் தக்காற்போன்று கொடுப்பதற்காகவும் கர்த்தரின் இராப்போஜனத்தில் பங்கேற்பதன்மூலம் இயேசுவைக் கனப்படுத்துவதற்காகவும், "வாரத்தின் முதல்நாள்தோறும்" (1 கொரிந்தியர் 16:2) என்ற ஞாயிற்றுக்கிழமையான இந்த விசேஷித்த நாளில் ஒன்றுகூடினர். பவுல் வரும்போது பணம்சேர்க்குதல் அவசியமாக இருக்கலாகாது என்பதே வாரந்தோறும் அவர்கள் காணிக்கை கொடுத்ததற்கான நோக்கமாக இருந்தது. இது சபைகள் வாரத்தின் முதல்நாள் கூடுதல் என்பது சாதாரணமானதாக/ பொதுவானதாக இருந்தது என்பதற்கான சாட்சியத்தை இன்னும் கூட்டுகிறது.

## வரலாற்றுப் பூர்வமான உறுதிப்பாடு

கிறிஸ்தவர்கள் ஓய்வுநாளில் அல்ல, ஆனால் அதற்கு மாறாக வாரத்தின் முதல்நாளில் அதாவது ஞாயிற்றுக்கிழமையில் கூடிவந்தனர் என்ற உண்மையை, அப்போஸ்தலர்களுக்குப் பிந்திய எழுத்தாளர்கள் உறுதிப்படுத்துகின்றனர். ஏழாம் நாள் அட்வெந்து சபை என்ற பெயர்க்குழுக் கூட்டத்தைக் தோற்றுவித்த எல்லென் G. வொயிட் (1827-1915) அவர்கள், வேறுவிதமாகப் போதித்தார். கான்ஸ்ட்டன்டைன் அரசருடைய காலத்திற்கு (கி.பி. c.280-337), ஏறக்குறைய மூன்று நூற்றாண்டுகள் முன்னதாகவே கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல்நாளில் கூடிவந்தனர் என்று வரலாறு காண்பித்தபோதிலும், வொயிட் அவர்கள், சபை கூடிவர ஞாயிற்றுக்கிழமையே அலுவலகரீதியான நாள் என்று ஏற்படுத்தத் தாமே பொறுப்பாளியாக இருந்ததாகக் கூறினார்.

> நான்காம் நூற்றாண்டின் முதற்பகுதியில், கான்ஸ்ட்டன்டைன் என்ற பேரரசர், ரோமானியப் பேரரசு முழுவதிலும் ஞாயிற்றுக்கிழமையை

ஒரு பொதுப் பண்டிகையாக்கும்படி சட்டம் இயற்றி வெளியிட்டார். ... ஆனால் தேவபயமுள்ள பல கிறிஸ்தவர்கள், பரிசுத்த ஆணையை உரிமைகொண்டிருந்த வகையில் ஞாயிற்றுக்கிழமையை மதிக்கும்படி வளர்நிலையில் வழிநடத்தப்படுகையில், அவர்கள் இன்னமும் உண்மையான ஓய்வுநாளைக் கர்த்தருக்குப் பரிசுத்த நாளாகப் பற்றிக்கொண்டு, நான்காவது கட்டளைக்குக் கீழ்ப்படிதலாக அதைக் கடைப்பிடித்து வந்தனர்.[10]

ஞாயிற்றுக்கிழமையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற முதல் பொதுவான அளவீட்டின்படியான அமல்படுத்துதல் கான்ஸ்ட்டன்டைன் [கி.பி. 321] என்பவரால் சட்டமாக்கப்பட்டது.[11]

கான்ஸ்ட்டன்டைன், ஞாயிற்றுக்கிழமை ஆராதனையைக் கட்டாயப்படுத்தவில்லை அல்லது அவர் கிறிஸ்தவர்கள் கூடும்நாளை சனிக்கிழமையில் இருந்து ஞாயிற்றுக்கிழமையாக மாற்றவும் இல்லை. இருப்பினும் அவர், மற்ற மதக்குழுக்கள் ஞாயிற்றுக்கிழமையை ஆராதனைக்கு விசேஷித்த நாளாகக் கொண்டிருக்கக் கூடும்படிக்கு - கிறிஸ்தவர்கள் கூடிவந்து கொண்டிருந்த நாளான - ஞாயிற்றுக்கிழமையை தனியே ஒதுக்கி அமைத்து வைத்தார். அவர் பேரரசில் இருந்த பல்வேறு மதங்கள் குறித்துச் சகிப்புத்தன்மை கொண்டிருந்தார். கி.பி. 313ல் கான்ஸ்ட்டன்டைன் அவர்கள் லிசினியுஸ் என்பவருடன் இணைந்து எழுதிச்செயல்படுத்திய கொள்கையானது “மிலான் அரச பிரகடனம்” என்று அறியப்பட்டுள்ளது. இது எல்லாருக்கும் மத சுதந்திரத்தை அளித்தது. வரலாற்றாளர்களில் ஒருவர் பின்வருமாறு எழுதினார்:

புதிய கொள்கையானது 311ல் இருந்ததுபோன்று வெறும் சகிப்புத்தன்மையாக மாத்திரம் இருக்கவில்லை; அல்லது அது கிறிஸ்தவத்தைப் பேரரசின் மதமாக்கவும் இல்லை. அது மனச்சாட்சிக்கு முழுமையான சுதந்தரத்தை அறிவித்தது, அது ரோம உலகத்தில் இருந்த வேறு எந்த மதத்துடனும் கிறிஸ்தவத்தை முழு சட்ட சமானநிலையில் வைத்தது. ...[12]

தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள் ஞாயிற்றுக்கிழமையில் கூடிவந்தனர் என்பதற்கான வரலாற்று ஆதாரங்களைத் தொகுத்த ஜியோஃப்ரி W. புரோமிலி அவர்கள், “இந்தப் பத்திகளை ஒன்றாக எடுத்துக் கொள்ளும்போது மாத்திரமே அவைகள், தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள் உயிர்த்தெழுதலின் நாளான ஞாயிற்றுக்கிழமையில் ஆராதனைக்குக் கூடிவந்தனர் என்று மறைமுகமாக உணர்த்துகின்றன” என்று முடிவுசெய்தார்.[13] தொடக்ககாலக் கிறிஸ்தவர்களின் நடைமுறைகளுக்குள் உட்கண்ணோக்கை நமக்குத் தரும் வரலாற்றுரீதியான ஆவணங்கள் சிலவற்றை நமக்கு நாமே பரிசீலனை செய்வோமாக.

முதல் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில், இளைய பிளீனி என்று அறியப்பட்ட ரோம அலுவலர் (கி.பி. 63-113) பேரரசர் ட்ரேஜன் அவர்களுக்கு எழுதிய கடிதம் ஒன்றில், கிறிஸ்தவர்களின் சபைகூடுகைகள் பற்றிப் பின்வருமாறு எழுதினார்:

... அவர்கள் குறிப்பிட்ட மாறாத நாளில் வெளிச்சம் வருவதற்கு முன்னதாகக் கூடும் பழக்கத்தில் இருந்தனர், அப்போது அவர்கள், தேவன் என்ற வகையில் கிறிஸ்துவுக்கு கீதத்தின் மாறும் பத்திகளில்

பாடல்கள் பாடினர், மற்றும் தீய செயல்கள் எதுவும் செய்யாதபடிக்குத் தங்களைப் பரிசுத்த ஆணையினால் கட்டுவித்துக் கொண்டனர், ஆனால் அவர்கள் ஒருக்காலும் எந்த மோசடியோ, திருட்டோ அல்லது விபசாரமோ செய்யாதிருக்கும்படியும் அவர்கள் தங்கள் வார்த்தைகளில் ஒருக்காலும் தவறாதிருக்கும்படியும் அல்லது அவர்கள் செய்யும்படி அழைக்கப்பட்டவற்றில் அவர்கள் ஒருக்காலும் தங்கள் நம்பகத்ததன்மையை மறுக்காதிருக்கவும் தங்களை பரிசுத்த ஆணையினால் கட்டுவித்துக் கொண்டனர். அதன்பின்பு பிரிந்து செல்லுதல் அவர்கள் வழக்கமாக இருந்தது, மற்றும் உணவு உண்பதற்கு அவர்கள் திரும்பவும் ஒன்றுகூடினர் - ஆனால் அது சாதாரணமான கபடம் இல்லாத வகையிலான உணவாக இருந்தது.[14]

பிலிப் ஸ்காஃப் என்பவரின் சபை வரலாறு, இந்தக் கடிதத்தின் ஒரு பகுதியினுடைய பொழிப்புரையை உள்ளடக்கியது, இத்துடன் அடைப்புகுறிகளுக்குள் விளக்கங்களும் உள்ளடக்கப் பட்டிருந்தன:

இதன்படி, கிறிஸ்தவர்கள் நியமிக்கப்பட்ட ஒரு நாளில் (ஞாயிற்றுக்கிழமைகளில்) சூரிய உதய வேளையில் கூடிவந்தனர், அவர்கள் கடவுள் என்ற வகையில் கிறிஸ்துவுக்குப் பதிலுரையாகப் பாடல் பாடினர் ... அதன்பின்பு (மாலையில்) அவர்கள் சாதாரண மற்றும் கபடமில்லாத உணவை (அன்பின் விருந்தை) உண்பதற்குத் திரும்பவும் கூடிவந்தனர்.[15]

பிளீனியின் கடிதம், கிறிஸ்தவர்கள் ஒரு விசேஷித்த மாறாத நாளில் இரு கூடுகைகளில் ஒன்று கூடினர் என்பதற்கு வேதாகமத்திற்கு வெளியே உள்ள உலக ஆதாரம் ஒன்றை அளிக்கிறது, இந்தக் கூடிகைகளில் ஒன்று சூரிய உதயத்திற்கு முன்பானதாகவும் இன்னொன்று பின்பானதாகவும் இருந்தது. நாள் எது என்று குறிப்பிடப்படவில்லை, ஆனால் அவர்கள் வேலைசெய்யச் செல்லும்முன்பு நாளின் தொடக்க வேளையில் கர்த்தருடைய இராப்போஜனத்தைக் கடைப்பிடித்தனர், இதை அவர்கள் யூத சமுதாயத்தில் நடைமுறையில் இருந்த ஓய்வுநாளில் செய்திருக்கவில்லை என்பதே வழக்கமான முடிவாக உள்ளது. பின்பு நாள் முழுவதிலும் வேலை செய்தபிறகு, பொதுவான மாலை உணவை உண்பதற்கு அவர்கள் திரும்பவும் ஒன்றுகூடினர். அவர்கள் கூடுகைக்கு ஓய்வுநாள் அல்ல ஆனால் ஞாயிற்றுக்கிழமையே "நிலையான நாளாக" இருந்தது என்பதை இதைத் தொடர்ந்து வரும் வரலாறும் உறுதிப்படுத்த முடிகிறது.

டைடேக் (நேரடி அர்த்தத்தில், "போதனைகள்") என்பது, கி.பி. 90 மற்றும் கி.பி. 150 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் எழுதப்பட்டதும், கிறிஸ்தவர்களுக்கான அறிவுறுத்துதல்கள் கொண்ட ஏவுதல் அற்ற புத்தகத் தொகுப்பாகவும் உள்ளது. இது, "மற்றும் கர்த்தருடைய சொந்த நாளில் நீங்கள் ஒன்றுகூடி அப்பத்தைப் பிட்டு நன்றி செலுத்துங்கள் ..."[16] என்று உரைக்கிறது. இந்த ஆதாரமூலம் "கர்த்தருடைய சொந்த நாள்" பற்றிப் பேசுகையில், இது ஞாயிற்றுக்கிழமையில் கூடிவருதலை ஓய்வு நாள் கடைப்பிடித்தலுடன் நேரெதிராக்குவதில்லை.

அந்தியோகியா சபையின் நடத்துனரும் அப்போஸ்தலரான யோவானுடைய மாணவருமான இக்னேஷியஸ் (கி.பி. c.35-c.107) அவர்கள் பின்வருமாறு

எழுதினார்:

> *ஆகையால், விஷயங்களின் பழங்கால முறைமைப்படி வளர்க்கப்பட்டவர்கள் புதிய நம்பிக்கையைக் கொண்டவர்களாகும்படி வந்திருந்தால், அவர்கள் இனியும் ஓய்வுநாளைக் கடைப்பிடிக்கத் தேவையில்லை, ஆனால் நமது வாழ்வு மீண்டும் துடிப்புடன் எழக்காரணமான கர்த்தருடைய நாளைக் கடைப்பிடித்து வாழ வேண்டும், அவராலும் அவரது மரணத்தினாலுமே நமது வாழ்வு மீண்டும் துடிப்புடன் எழுகிறது.*[17]

இங்கு நாம், வாரத்தின் முதல் நாளைக் கடைப்பிடித்தலுக்கும் ஓய்வுநாளைக் கடைப்பிடித்தலுக்கும் இடையிலான தெளிவான நேரெதிர்நிலையைக் கண்டறிகிறோம், ஆனால் ஆராதனை என்பது திட்டவட்டமாகக் குறிப்பிடப்படவில்லை.

கி.பி. 130ம் ஆண்டு வாக்கில் எழுதப்பட்ட பர்னபாவின் நிருபம் பின்வருமாறு கூறுகிறது:

> *கடைசியாக அவர்களிடம் அவர் பின்வருமாறு கூறினார்; உங்கள் அமாவாசைகளையும் உங்கள் ஓய்வு நாட்களையும் என்னால் பொறுத்துக்கொள்ள (சகித்து) முடிவதில்லை. அவரது அர்த்தம் என்ன என்று நீங்கள் காணுகிறீர்கள்; இது (என்னால்) ஏற்றுக்கொள்ளப்படுபவையான உங்கள் தற்போதைய ஓய்வுநாட்கள் அல்ல, ஆனால் எல்லாவற்றையும் முடித்தபோது, நான் ஏற்படுத்திய ஓய்வுநாள் ஆகும், நான் இன்னொரு உலகத்தின் தொடக்கமான எட்டாவது நாளின் தொடக்கத்தை ஏற்படுத்துவேன். ஆகவே நாம், எட்டாவது நாளை மனக்களிப்பின் நாளாகக் கடைப்பிடிப்போம், அதில்தான் இயேசுவும் மரித்தோரில் இருந்து உயிர்த்தெழுந்தார், மற்றும் அவர் பரலோகத்திற்கு எழுந்து சென்றதும் காட்சிப் படுத்தப்பட்டது.*[18]

"எட்டாவது நாள்" என்பது வாரத்தின் ஏழாவது நாளைத் தொடர்ந்து வரும் என்பதும், இது புதிய வாரத்தின் முதல்நாளாக இருக்கும் என்பதும் தெளிவு. பர்னபாவின் கூற்றானது "கர்த்தருடைய நாள்" என்ற சொற்றொடரைக் கொண்டிராவிட்டாலும், ஆகையால் ஞாயிற்றுக்கிழமையையே அகமகிழ்வின் நாளாக அடையாளப்படுத்துகிறது, ஏனென்றால் அந்தநாளில்தான் இயேசு உயிர்த்தெழுந்தார் மற்றும் பிற்பாடு பரலோகத்திற்கு எழுந்து சென்றார்.

மிகத் தொடக்ககாலத்தில் கிறிஸ்தவத்திற்குப் பரிந்து பேசியவர்களில் ஒருவரான ஜஸ்டின் மார்ட்டியர் (கி.பி. 100-165) அவர்கள், ஞாயிற்றுக்கிழமை ஆராதனை மற்றும் ஓய்வுநாள் கடைப்பிடிப்பு ஆகியவற்றை நேர் எதிராக ஒப்பிட்டுத் தெளிவான கூற்றுக்களை ஏற்படுத்தினார்:

> *என் நண்பர்களே, நாம் குற்றம் சாட்டப்பட்டுள்ளவற்றில் இதைக்காட்டிலும், வேறு ஏதாவது பொருட்படுத்தப்பட வேண்டும் என்றால், அது நாம் நியாயப்பிரமாணத்தின்படி வாழ்வதில்லை மற்றும் உங்கள் முற்பிதாக்களைப் போன்று மாம்சத்தில் விருத்தசேதனம் செய்யப்படவில்லை மற்றும் நீங்கள் செய்வது போன்று ஓய்வுநாட்களைக் கடைப்பிடிப்பதில்லை என்பதாக இருக்குமா?*[19]

மற்றும் ஞாயிற்றுக்கிழமை என்று அழைக்கப்பட்ட நாளில், நகரங்களில் அல்லது கிராமப்புறங்களில் வாழ்பவர்கள் யாவரும் ஒரு இடத்தில் ஒன்றுகூடி, நேரம் அனுமதிக்கும் வரையில் அப்போஸ்தலர்களின் வசனங்களை மனனம் செய்கின்றனர் அல்லது தீர்க்கதரிசிகளின் எழுத்துக்கள் வாசிக்கப்படுகின்றன ... பின்பு நாம் எல்லாரும் ஒன்றாக எழுந்து நின்று ஜெபிக்கின்றோம், நாம் முன்பு கூறியபடி, நமது ஜெபம் முடிக்கப்பட்டபோது, அப்பமும் திராட்சரசமும் தண்ணீரும் கொண்டுவரப்படுகின்றன ... அதில் ஒவ்வொருவருக்கும் பங்கு உள்ளது ... ஆனால் ஞாயிற்றுக்கிழமை என்பது நாம் எல்லாரும் நமது பொது கூடுகையைப் பற்றிக்கொள்ளும் நாளாக உள்ளது, ஏனெனில் அது தேவன் இருள் மற்றும் பொருள் ஆகியவற்றில் மாற்றம் கொண்டு வந்த முதல் நாளாக, உலகத்தை உண்டாக்கிய நாளாக உள்ளது; மற்றும் நமது மீட்பராகிய இயேசு அந்த நாளில்தான் மரித்தோரில் இருந்து உயிர்த்தார்.[20]

*பேதுருவின் நடபடிகள்* என்று அழைக்கப்பட்டுள்ள அப்போஸ்தலிக்க நடபடியின் அப்போகிரைப்பல் (ஏவுதல் பெற்றிராதது) பதிவு ஒன்று கி.பி. 180ம் ஆண்டு வாக்கில் எழுதப்பட்டது, இது ஓய்வுநாள் நீக்கப்பட்டது என்று குறிப்பிடுகிறது:

யூதர்களின் பேரறிஞர்களுடன் பவுல் அடிக்கடி வாதிட்டு அவர்களின் தவறைத் தெளிவாகச் சுட்டிக்காண்பித்தார், அவர் பின்வருமாறு கூறினார்: உங்கள் பிதாக்கள் யார்மீது தங்கள் கைகளை வைத்தார்களோ, அந்த கிறிஸ்து, அவர்களின் ஓய்வுநாட்களையும் உபவாசங்களையும் மற்றும் பரிசுத்த நாட்கள் மற்றும் விருத்தசேதனம் மற்றும் மனிதர்களின் உபதேசங்கள் மற்றும் எஞ்சியுள்ள பாரம்பரியம் யாவற்றையும் ஒழித்துப்போட்டார்.[21]

பழங்காலக் கிறிஸ்தவ எழுத்தாளர்களில் மிகவும் மதிக்கப்பட்டவரும் ஏராளமான நூல்களை எழுதியவருமான, ரோமானியரான தெர்த்துல் லியன் என்பவர் (கி.பி. 160-220), கிறிஸ்தவர்களால் ஓய்வுநாட்கள் இனியும் கடைப்பிடிக்கப்படவில்லை என்று குறிப்பிட்டார்.

ஓய்வு நாட்கள் என்பவை வினோதமாக உள்ள நம்மால் ...[22]

இது மாம்சத்திற்குரிய விருத்தசேதனமும் பழைய பிரமாணமும் அதன் குறிப்பிட்ட காலங்களில் நிறைவேற்றித் தீர்க்கப்பட்டுள்ளது என்ற அளவிற்குப் பின்தொடருகிறது, அதுபோன்றே ஓய்வுநாளைக் கடைப்பிடித்தல் என்ற பிரமாணமும் தற்காலிகமானதாக இருந்துள்ளது என்பதும் செயல்விளக்கப் படுத்தப்பட்டுள்ளது.[23]

‘‘சபை வரலாற்றின் தந்தை’’ என்று குறிப்பிடப்பட்டுள்ளவரும், செசரியாவைச் சேர்ந்தவருமான யூசுபியஸ் அவர்கள், கி.பி. 300ம் ஆண்டுவாக்கில் எழுதினார். எபோனைட்டுகளின் (யூதர்களின் நடைமுறைப் பிரிவுகள்) இரு குழுக்களைக் கிறிஸ்தவ ஐக்கிய விருந்தில் உள்ள பிறருடன் நேரெதிராக ஒப்பிட்டு, யூசுபியஸ் பின்வருமாறு பதிவுசெய்தார்:

(எபோனைட்டுகளின் மற்றொரு குழுவைப்போன்றே) அவர்களும்கூட,

*ஓய்வுநாளைக் கடைப்பிடிக்கின்றனர், மற்றும் யூதர்களின் மற்றொரு ஒழுங்கமைப்பும் அவர்களைப் போன்றே உள்ளது, ஆனால் இன்னொரு புறத்தில், அவர்கள் கர்த்தருடைய நாட்களை, அவரது உயிர்த்தெழுதலை நினைவுகூருதலில் மிகவும் நம்மைப் போன்றும் கொண்டாடுகின்றனர்.*[24]

*மதிப்பிற்குரிய ஸ்கேஃப் வரலாறு பின்வருமாறு உரைக்கிறது:*

*இரண்டாம் நூற்றாண்டில் ஞாயிற்றுக்கிழமையைக் கடைப்பிடித்தல் என்ற உலகளாவிய மற்றும் முரண்பாடில்லாத வழக்கமானது, அது அப்போஸ்தலிக்க நடைமுறையில் தனது வேர்களைக் கொண்டிருந்தது என்பதைக் கொண்டு மாத்திரமே விளக்கப்பட முடியும். இப்படிப்பட்ட கடைப்பிடித்தல் கான்ஸ்ட்டன்டைன் காலத்திற்கு முன்னர் குடிமைச் சட்ட அமைப்பில் ஆதரவு எதையும் பெற்றிருந்ததில்லை என்ற வகையில் அதிகம் மதிக்கப்பட்டதாக உள்ளது, மற்றும் இது பெரும்பான்மையான கிறிஸ்தவர்களின் தாழ்வான சமூக நிலையையும் அவர்கள் புறதெய்வங்களை வணங்கிய தங்கள் எஜமானர்களையும் தங்களை வேலைக்கு அமர்த்தியவர்களையும் சார்ந்திருக்க வேண்டி இருந்தது என்பதையும் ஆழ்ந்து சிந்திக்கையில், பல வசதிக்குறைவுகளுடன் அவர்கள் தொடர்புபடுத்தப்பட்டிருக்க வேண்டும்.*[25]

*வில்லி ரோர்டோர்ஃப் அவர்கள் பின்வருமாறு முடிவு செய்தார்: ...*

*... பழங்கால சபையில் கர்த்தருடைய இராப்போஜனத்தின் ஆசரிப்புக்காக உள்ளூர் சபை ஒன்றுகூடுதல் இன்றி ஒரு ஞாயிற்றுக்கிழமை கடந்து செல்லுதல் என்பது நினைத்துப் பார்க்க இயலாததாக இருந்தது. ஞாயிற்றுக்கிழமை என்பது கர்த்தருடைய பந்தி இல்லாத நிலையில் முற்றிலும் ஒன்றுமற்றதாக இருந்தது; கர்த்தருடைய இராப்போஜனம் என்பது ஆராதனையின் மற்ற பாகங்கள் யாவும் சுற்றிலும் அமையப்பெற்ற கவனக்குவிப்பு முனையை வடிவமைத்தது. மற்ற வேளைகளில் பொதுவான ஜெபம் அல்லது பொதுவான உணவு ஆகியவற்றிற்குக் கூடுகைகள் இருந்தன, ஆனால் கர்த்தரின் பந்திக்கான கூடுகை ஞாயிற்றுக்கிழமை மாத்திரமே இருந்தது.*[26]

## வாரந்தோறும் கடைப்பிடித்தல்

பல்வேறு மதக்குழுக்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தை - ஆண்டுக்கு ஒருமுறை, ஆண்டுக்கு இருமுறை, காலாண்டிற்கு ஒரு முறை, மாதத்திற்கு ஒருமுறை, வாரத்திற்கு ஒருமுறை, தினந்தோறும் அல்லது குறிப்பிடப்படாத எந்தக் காலத்திலும் என்று - பல்வேறு வேளைகளில் மற்றும் கால இடைவெளிகளில் எடுத்துக்கொள்கின்றன. சிலர் திருமணங்கள், ஞானஸ்நானங்கள் மற்றும் பிற வேளைகளில் அடையாளச்சின்னங்களாகப் பங்கேற்கின்றனர். புதிய ஏற்பாடு வாரத்தின் நாளைக் குறிப்பிடுகிறது, ஆனால் நாளின் எந்தப் பகுதியில் அது கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று அது குறிப்பிடுவதில்லை.

இரண்டாம் நூற்றாண்டின் போது, கர்த்தருடைய இராப்போஜனம் உலகளாவிய வகையில் ஞாயிற்றுக்கிழமையில் எடுத்துக்கொள்ளப்பட்டது, இது இந்த நடைமுறை அப்போஸ்தலிக்க உபதேசத்தின் அடிப்படையில்

அமைந்திருந்ததை அர்த்தப்படுத்துகிறது. அப்படி இல்லையென்றால், வேறு எதற்காக ஆப்பிரிக்காவில் இருந்து ரோமாபுரி வரையிலும் மற்றும் ரோமப்பேரரசு முழுவதிலும் உள்ள சபைகள் கர்த்தருடைய பந்தியைக் கடைப்பிடிக்க ஞாயிற்றுக்கிழமையில் கூடிவரவேண்டும்? அப்போஸ்தலர்கள் ஞானஸ்நானம் கொடுத்தவர்களுக்கு, இயேசு, "நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள்" (மத்தேயு 28:20) என்று கூறியிருந்தார், மற்றும் தொடக்கால சபை அப்போஸ்தலர்களின் உபதேசத்தைப் பின்பற்றிற்று (நடபடிகள் 2:42). ஞாயிற்றுக்கிழமை மாத்திரமே அவர்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கேற்பதால் கர்த்தரை நினைவுகூரக் கூடிவந்த ஒரே நாளாக இருந்ததால், வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை இதைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பது சந்தேகமின்றி அப்போஸ்தலத்துவ அதிகாரமாக இருந்தது.

இயேசுவினிடம் தொடங்கி தொடக்ககால சபையாரால் முதல் மற்றும் இரண்டாம் நூற்றாண்டுகளில் சீராகப் பின்பற்றப்பட்டதாக ஒரு நடைமுறையை நாம் காணுகிறபோது, அவர்களின் உதாரணத்தைப் பின்பற்றுதல் என்பதே பாதுகாப்பான ஓட்டமாக உள்ளது. கர்த்தருடைய இராப்போஜனத்திற்கான குறிப்பில், தொடக்ககால சபையார் கூடிவந்த நாளில் கூடுதல் என்பது வாரத்தின் மற்ற எந்த நாளையும் தேர்ந்து எடுப்பதைக் காட்டிலும் மேன்மையான ஓட்டமாக உள்ளது.

சபையின் முதல் இரு நூற்றாண்டுகளைப் பற்றி உரைக்கும் வரலாற்றுப் பதிவேடுகள், ஞாயிற்றுக்கிழமை தவிர வேறு எந்த நாளிலும் கர்த்தருடைய இராப்போஜனம் எடுத்துக்கொள்ளப் பட்டதற்கான உதாரணம் எதையும் அளிப்பதில்லை. மற்ற வேளைகளில் இதைக் கடைப்பிடித்தல் என்பது புதிய ஏற்பாட்டு அதிகாரத்துவமானதாகவோ அல்லது தொடக்ககால சபையின் முன்னோடி நிகழ்வாகவோ இருப்பதில்லை.

## தொகுப்புரை

சபையின் தொடக்கத்தில் இருந்தே, கிறிஸ்தவர்கள் தங்கள் பொருளில் இருந்து காணிக்கை கொடுக்கவும் கர்த்தருடைய இராப்போஜனத்தைக் கடைப்பிடிக்கவும் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை கூடிவந்தனர் என்பதற்கான சாட்சியங்கள் ஏராளமாக உள்ளன. அவர்கள் ஜெபங்கள் (நடபடிகள் 4:23-31; 6:6; 12:12); அறிக்கைகள் (நடபடிகள் 4:23; 14:27); மற்றும் முடிவெடுத்தல் (நடபடிகள் 15:6, 7) ஆகியவை உட்படப் பிற நோக்கங்களுக்காக கூடுதலாக மற்ற வேளைகளிலும் கூடிவந்தனர். இருப்பினும் காணிக்கைகள் மற்றும் கர்த்தருடைய இராப்போஜனம் ஆகியவற்றிற்கு, வாரத்தின் முதல் நாளான ஞாயிற்றுக்கிழமை என்பதே அவர்களின் விசேஷித்த நாளாக இருந்தது.

---

குறிப்புகள்

[1]Willy Rordorf, *Sunday, trans.* A. A. K. Graham (Philadelphia: Westminster Press, 1968), 199. [2]Everett Ferguson, *Early Christians Speak* (Abilene, Tex.: Biblical Research Press, 1981), 70. [3]*"Kuriakos"* என்பது ஒரு பெயர் உரிச்சொல்லாக உள்ளது, இதற்கு மிகச்சரியான ஆங்கில அல்லது தமிழ் வார்த்தை கிடைப்பதில்லை என்பதைக் கவனியுங்கள். வெளிப்படுத்தின

*விசேஷம் 1:10 மாத்திரமே இவ்வார்த்தை உள்ள இன்னொரு புதிய ஏற்பாட்டுப் பகுதியாகும்”* (Alfred Marshall, *The R.S.V. Interlinear Greek-English New Testament* [Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1970], 687). [4]lbid., 957. [5]G. H. Waterman, “Lord’s Day,” *The Zondervan Pictorial Encyclopedia of the Bible,* ed. Merrill C. Tenney (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1975), 3:965. [6]Isbon T. Beckwith, *The Apocalypse of John* (New York: Macmillan Co., 1919; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1967), 435. [7] *ஏசாயா 2:12; எரேமியா 46:10; புலம்பல் 2:22; எசேக்கியல் 13:5; யோவேல் 1:15; ஆமோஸ் 5:20; ஒபதியா 15; செப்பனியா 1:8; மல்கியா 4:5 ஆகிய வசனங்களைக் காணவும் (தமிழ் வேதாகமத்தில் இவ்வசனப்பகுதிகளில் இது “யாவேயின் நாள்” என்று அல்ல, ஆனால் “கர்த்தருடைய நாள்” என்றே குறிப்பிடபப்பட்டுள்ளது).* [8]*1 கொரிந்தியர் 1:8; 5:5; 2 கொரிந்தியர் 1:14; 1 தெசலோனிக்கேயர் 5:2; 2 பேதுரு 3:10 ஆகிய வசனங்களைக் காணவும்.* [9]Beckwith, 3:435. [10]Ellen G. White, *The Great Controversy Between Christ and Satan* (Mountain View, Calif.: Pacific Press Publishing Assoc., 1888; reprint, 1948), 53.

[11]Ibid., 574. [12]Williston Walker, *A History of the Christian Church,* 3d ed., rev. Robert T. Handy (New York: Charles Scribner’s Sons, 1970), 101. [13]Geoffrey W. Bromiley, “Lord’s Day,” *The International Standard Bible Encyclopedia,* ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1986), 3:159. [14]Pliny *Letters* 10.96. [15]Philip Schaff, *History of the Christian Church,* vol. 1 (New York: Charles Scribner and Co., 1869), 382. [16]*Didache* 14:1. [17]Ignatius *Magnesians* 9. (Emphasis mine.) [18]Barnabas *Epistle* 15:8, 9. (Emphasis mine.) [19]Justin Martyr *Dialogue with Trypho* 10:1. [20]Justin Martyr *1 Apology* 67:3.

[21]*Acts of Peter* 3:1. [22]Tertullian *On Idolatry* 14:6. [23]Tertullian *An Answer to the Jews* 4:1. [24]Eusebius *Ecclesiastical History* 3.27. [25]Philip Schaff, *History of the Christian Church,* vol. 1, 3d rev. (New York: Charles Scribner’s Sons, 1890), 478-79. [26]Rordorf, 305.